<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

MCOP.No.128/2013 Date: 14.03.2025.

PW1- சுப்ரமணி

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

நான் பயணம் செய்த மாருதி வேனின் ஓட்டுநரை மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் இதற்கு முன்பு இதே விபத்து சம்பந்தமாக பவானி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் MCOP.No.62/2013 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் நிலை என்ன ஆனது என்றால் அந்த வழக்கை தான் இந்த நீதிமன்றத்திற்கு மாற்றிவிட்டதாக என் வழக்கறிஞர் சொன்னார். அந்த மாறுதல் உத்தரவு என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நான் மேற்படி வழக்கை இந்த நீதிமன்றத்திற்கு மாற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே ஏற்கனவே தாக்கல் செய்த மனுவை மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கு பொது பணி வில்லை இல்லை என்பதால் இந்த எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

Sd/-சுப்ரமணி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.